**உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியம் - 2013**

---

உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் உள்ளூராட்சி சேவைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 264) 62(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாகிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

**1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலாதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

**2 நிதிக்கூற்றுக்கள்**

**2.1 பாதகமான அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

மீளாய்வாண்டில் ஒட்டுமொத்த ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்கான பங்களிப்பு ரூபா 79,250,000 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், ஓய்வூதியத் திணைக்களத்தின் கணனித் தரவு முறைமையின் செலவின வகைப்படுத்தலின் பிரகாரம் மீளாய்வாண்டில் நிதியத்தின் ஒட்டு மொத்த ஓய்வூதியச் செலவினம் ரூபா 878,725,010 ஆனமையால் ரூபா 799,475,010 தொகையான ஓய்வூதியச் செலவினம் குறைவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

(அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய பங்களிப்புப் பணத்தின் கீழ் காணப்படுகின்ற உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய மீதி கணிப்பீடு செய்வதற்கு உரித்தாக்கப்பட்ட பட்டியல் பதிவேட்டைவிட ரூபா 62,897,485 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த வேறுபாட்டை விளக்குவதற்குத் தேவையான கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்குகளில் காண்பிக்கப்பட்ட ரூபா 604,652 தொகையான மதிப்பிழந்த காசோலைகளை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அக்காசோலைகள் தொடர்பான விபரங்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) தேசிய அரசாங்க சபையின் 1974 இன் 16 ஆம் இலக்க உள்ளூராட்சி சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு மற்றும் 2011 பெப்ரவரி 24 ஆந் திகதிய 02/2011 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றுநிரூபத்தின் 4:3 ஆம் பந்தி | உள்ளூராட்சி நிறுவனங்களினால் நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணமான ரூபா 1,521,417,434 தொகையான நிலுவை மீதி உள்ளூராட்சி சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு செலுத்துவதற்குள்ள ஏதாவது தொகையிலிருந்து கழித்துக்கொள்வதற்கோ அல்லது சுற்றுநிருப ஆலோசனையின் பிரகாரம் பெற்றுக் கொள்வதற்கோ போதியளவான படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றுநிரூபத்தின் 4.1. (அ) பந்தி | மீளாய்வாண்டிற்காக பாதீடு தயாரிக்கப்பட்டு அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2012 பெப்ரவரி 08 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க சுற்றுநிரூபம் | அந்தந்த மாதத்தில் மரணித்தவர்கள் தொடர்பான அறிக்கை அடுத்துவரும் மாதத்தின் 25 ஆந் திகதிக்கு முன்னர் மாவட்ட செயலாளர்களினால் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அதனைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 25,118,987 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 25,963,371 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது நிதி விளைவுகளில் ரூபா 844,384 தொகையான வீழ்ச்சியினைக் காட்டியது. இந்த வீழ்ச்சிக்கு பங்களிப்புத் தொகை வருமானம் ரூபா 15,494,385 இனால் குறைவடைந்தமை காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் உள்ளூராட்சி ஓய்வூதியக் கோவைகளை பிரதேச செயலகங்களுக்கு பன்முகப்படுத்துவதற்கு முன்னர் ஓய்வூதியக்காரர்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் அவர்கள் கடமையாற்றிய நிலையங்கள் தொடர்பாக ஓய்வூதியத் திணைக்களத்தினால் அறிக்கையொன்று தயாரிக்கப்படாமையின் காரணமாக உரிய உறுதிப்படுத்தலின்றி மீளாய்வாண்டின் போது ரூபா 223,836 தொகையும், முன்னைய ஆண்டில் ரூபா 433,991 தொகையும் மரணித்தவர்கள் சார்பாக பங்களிப்புப் பணக் கணக்கில் சீராக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்காக திணைக்களத்தின் புள்ளிவிபரப்பிரிவிலிருந்து பெறப்பட்ட தரவுகளின் பிரகாரம் மரணித்த உள்ளூராட்சி ஓய்வூதியக்காரர்களின் எண்ணிக்கை 491 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் சீராக்கப்பட்ட மரணித்த ஓய்வூதியக்காரர்கள் 183 மாத்திரமாக இருந்தது. அதன் பிரகாரம் மரணித்த 308 ஓய்வூதியக்காரர்கள் தொடர்பாக சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு பங்களிப்புப் பணத்தை கணிப்பீடு செய்வதிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக மரணித்த ஓய்வூதியக்காரர்களின் பெயரை நீக்காமல் தொடர்ச்சியாக உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய பங்களிப்பு தயாரிக்கப்படுகின்றமையினால் ஆண்டின் பங்களிப்பின் பெறுமதி அதிகரித்துக் காண்பிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 4.2 பங்களிப்புப் பண முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது பங்களிப்புப் பணம் எதுவும் செலுத்தாத 123 பிரதேச சபையிலிருந்து கிடைக்க வேண்டிய பங்களிப்புப் பணம் ரூபா 10,370,925 ஆகும்.

(ஆ) கடந்த சில வருடங்களில் உள்ளூராட்சி சேவை ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மற்றும் அந்த வருடங்களுக்குரிய பங்களிப்புப் பண கணக்கு வைத்தல் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலுத்தப்பட்ட ஓய்வூதியப் பெறுமதி ரூபா | ஆண்டில் கிடைக்கப் பெற்ற பங்களிப்புப் பணம் ரூபா |
|---|---|---|
| 2010 | 940,060,460 | 129,981,285 |
| 2011 | 689,425,595 | 122,978,480 |
| 2012 | 837,302,193 | 119,863,371 |
| 2013 | 878,725,010 | 104,368,987 |

இது தொடர்பாக, பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. 2011 ஆம் ஆண்டின் ஓய்வூதியத்தை விட 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 147,876,598 தொகையான அதிகரிப்பும், 2013 ஆம் ஆண்டின் போது 2012 ஆம் ஆண்டை விட ரூபா 41,422,817 இனால் அதிகரிப்பும் காணப்பட்டதுடன் ஆண்டிற்குரிய பங்களிப்புப் பண முறைமையிலும் குறைவொன்றைக் காட்டியது.

ii. கடந்த சில ஆண்டுகளில் சில சந்தர்ப்பங்களில் ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதியம் திருத்தப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் அறவிட வேண்டிய பங்களிப்புப் பணத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீடு
(இ) பங்களிப்புப் பணம்